# மொழிப் போராட்டம்



# மொழிப் போராட்டம்

மொழிப்போராட்டம் என்பது  மொழிக்காகக் குரல் கொடுப்பதாகும்.தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலக அளவில் பல நாடுகளி லும் மொழிப்போராட்டம் நடைபெற்றுள்ளது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் தினம் கடைபிக்கப்படுகிறது. தமிழ் மொழி உரிமைகளுக்காக போராடி உயிர் நீத்த தியாகிகளுக்கு இந்த தினத்தில் அஞ்சலியும் செலுத்தப்படுகிறது

# தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம்




- **முதல் மொழிப் போர்- 1937-1940**
- **இரண்டாம் மொழிப் போர்- 1948-1952**
- **மூன்றாம் மொழிப் போர்- 1965 (50 நாட்கள்)**
- **நான்காம் மொழிப் போர்- 1986 (140 நாட்கள்)**

1937 ஆம்ஆண்டு முதல் முறையாக இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அப்போது சென்னை மாநிலத்தில் முதல் முறையாக வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் இராஜாஜி தலைமையில் அமைந்த அரசு, பள்ளிகளில் இந்தி படிப்பதைக் கட்டாயமாக்கியது. அதை எதிர்த்து, பெரியார் ஈ. வெ. இராமசாமி மூன்று ஆண்டுகள் உண்ணா நோன்பு மாநாடுகள், பேரணிகள் மற்றும மறியல் போராட்டங்கள் நடத்தினர். காங்கிரசு அரசு 1939 ம் ஆண்டு பதவி விலகியதை ஒட்டி சென்னை மாகாண பிரித்தானிய ஆளுநர் 'எர்ஸ்கின் பிரபு' பிப்ரவரி1940ம் ஆண்டில் இந்தக் கட்டாய இந்திக் கல்வியை விலக்கினார்.



மொழிப்போராட்டத்திற்கு ஆதரவு வேண்டி தந்தை பெரியார் முகமது அலி ஜின்னாவும், அம்பேத்கார் உடன் சந்தித்த நிகழ்வு



# குடி அரசு

"KUDI ARASU"

## வீழ்க இந்தி!

பெரியாரின் குடிஅரசு இதழில் 03.09.1939 *அன்று* முதல் பக்கத்தில் ”வீழ்க இந்தி” என்ற தலையங்கம் காணப்படுகிறது

